ஸ்பீட் பிரேக்குகள் எங்கெங்கு போடுவது, வேறு என்னென்ன காரியங்கள் செய்யலாம் என்பது பற்றி முடிவு எடுப்பார்கள்.

மொத்தம் 18 பேரில் மாண்டவர்கள் 3 பேர் போக மீதி 15 பேர் பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு பெண்ணின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

நான் ஏற்கெனவே கூறியபடி உயிர்நீத்த குடும்பத்தாருக்கு அரசின் சார்பிலும், போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலும் என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அந்தக் குடும்பங்களுக்கு நிதி உதவி இழப்புத் தொகையாகக் கொடுப்பது பற்றி அனுதாபத்தோடு கவனிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசும் போது இந்த அரசாங்கமே ராஜிநாமா செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இன்னும் இரண்டு மாதங்களில் தேர்தல் வந்தாலும் வரும். அதுவரை அவர்கள் பொறுத்திருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு சபையை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்று கருதுவதால் நான் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(5) அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

THIRU B. VENKATASWAMY: Sir, I rise to present the report of the Public Account Committee on the excess over voted grants and charged appropriations for the year 1971–72.